முக்கிய வார்த்தைகள்:
*வாழ்க்கை*
*விட்டுச் செல்லும் பொருள்*
*பரம்பரைச் சொத்து*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**31 ஜூலை 2026 / 16 ஸஃபர் ஹிஜிரி 1448**

# ஓரிறை நம்பிக்கையாளர் விட்டுச் செல்லும் பரம்பரைச் சொத்து

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ
لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ.
ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا
عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ
وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

உண்மையான விழிப்புணர்வுடன் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து விலகி இருங்கள். இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நம்மீது தனது கருணை மழையைப் பொழிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது சகோதரர்களே!**

ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தைச் சுவைத்தே தீரும்; இது நிச்சயமற்ற இந்த உலக **வாழ்வின்** யதார்த்த நிலையாகும். நாம் இறந்த பிறகு எந்த **பரம்பரைச் சொத்து**, தொடர்ந்து நிலைத்திருந்து நமக்குப் பயனளிக்கும்?

எனச் சிந்திக்குமாறு, மரணம் ஒவ்வொரு ஓரிறை நம்பிக்கையாளரையும் கேட்டுக் கொள்கிறது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

நமது கல்வி, தொழில், ஓய்வுக்காலம் ஆகிய நமது **வாழ்வின்** எந்த அம்சமாக இருந்தாலும் அவற்றில் திட்டமிட்டுச் செயல்படுமாறு திருக்குர்ஆன் நம்மை ஊக்குவிக்கிறது. இது மரணத்திற்கும் பொருந்தும்; நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தத் தயாரிப்பு செய்யப்படுவது அவசியமாக இருக்கிறது. காரணம், நாம் தயாரிப்பதும் **விட்டுச் செல்வதும்** நன்மையைத் தருபவையாக இருக்க வேண்டும். இவ்வுலக **வாழ்க்கையில்** நாம் செய்யும் நற்காரியங்கள், நாம் இறந்த பிறகு மற்றவர்களால் உணர முடியும் நிலையில் உள்ளனவா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

சகோதரர்களே! ஒருவர் மரணமடைந்திருக்கலாம்; ஆனால், அவர் அடிக்கடி வெளிப்படுத்திய உன்னதமான விழுமியங்களும் மதிப்பீடுகளும் மேலும், ஒரு காலத்தில் அவர் வழங்கிய ஞானமிக்க அறிவுரைகளும் மற்றவர்களின் நினைவில் பசுமையாக நிலைத்திருக்கும்.

அவர் தனது நற்செயல்களை பொருள் வடிவிலும் செய்திருக்கலாம்; உதாரணமாக, ஒரு கல்விக்கூடம் அல்லது பள்ளிவாசல், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நம்மை விட்டும் பிரிந்த ஒருவரால் கட்டப்பட்டு, நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கலாம்; ஆயினும், அவரது அந்த பங்களிப்பு இன்றளவும் நம்மால் உணரப்படுவதைக் காண்கிறோம்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

அல்லாஹ்வின் தூதர்[ஸல்] அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: அதன் பொருள்: *"நபிமார்களாகிய நாங்கள் யாருக்கும் வாரிசுப் பொருட்களை விட்டுச் செல்பவர்கள் அல்ல; [அதாவது, எங்கள் பொருட்களுக்கு வாரிசுக் காரர்களாக யாரும் இருக்க முடியாது] நாங்கள்* ***விட்டுச் செல்லும்*** *அனைத்து*

*பொருட்களும் தர்மமேயாகும்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

மற்ற மக்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்ற சில தனித்தன்மைகளை இறைத்தூதர்கள் பெற்றுள்ளார்கள். அவர்களின் செல்வத்துக்கு வாரிசுக்காரர்கள் எவரும் இல்லை; அவர்கள் ஏதேனும் செல்வத்தை **விட்டுச் சென்றால்**, அது அல்லாஹ்வின் பாதையில் தர்மமாகச் செலவிடப்படும்; காரணம், ஒரு இறைத்தூதர் தனக்குப் பின் வருபவர்களுக்கு அதாவது, தனது சந்ததியினருக்கோ அல்லது தம்மைப் பின்பற்றுவோருக்கோ விட்டுச் செல்வது பொருள் செல்வம் அல்ல, மாறாக, அறிவையும் தனது போதனைகளுமே வாரிசுப் பொருளாக விட்டுச் செல்பவராக இருப்பார்.

இதை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் விட்டுச் சென்ற அறிவும் ஞானமும் எந்தவொரு வாரிசுரிமைச் சொத்தையும் விட மேலானது, பொருள்மிக்கது என்பது தெளிவாகத் தென்படும்; ஒரு நீடித்த நன்மையை உருவாக்கும் **பரம்பரைச் சொத்தை** எவ்வாறு நாம் **விட்டுச் செல்ல** முடியும் என்பதற்கான முழு விளக்கம் அந்த ஞானத்திற்குள், அடங்கியுள்ளதைக் காணலாம்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:
*"ஒருவர் மரணிக்கும் போது, அவருடைய செயல்களில் மூன்றைத் தவிர மற்ற அனைத்து செயல்களும் முடிவுக்கு வந்து விடுகின்றன; அவை, தொடர்ச்சியான நன்மையைத் தரும் தர்மச் செயல், பயனுள்ள அறிவு மற்றும் அவருக்காகப் பிரார்த்தனை செய்யும் ஒரு நல்ல பிள்ளை ஆகியவையாகும்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

நாம் மரணித்த பிறகு மற்றவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் நாம் **விட்டுச் செல்ல** விரும்பும் **பரம்பரைச் சொத்தைக்** குறித்துச் சிந்திப்பதற்கு இன்றைய "குத்பா" பிரசங்கம் மூன்று விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து

கொள்ள விரும்புகிறது. அவை நமக்கு உத்வேகத்தை அளிக்கும் என நம்புகிறோம்:

**முதலாவதாக: தொடர் தர்மம்; அதாவது, பலன்களைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும் தர்மச் செயல்**

சகோதரர்களே! செய்யிதினா உஸ்மான் பின் அஃப்ஃபான் [ரலி] அவர்கள் மதீனா நகரில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் நலனுக்காக ஒரு கிணற்றை வாங்கினார்கள்; அந்தக் கிணறு இன்று வரை உள்ளது. சுமார் பதினான்கு நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் கூட அது மற்றவர்களுக்குத் தொடர்ந்து பயனளித்து வருகிறது. செய்யிதினா உஸ்மான் [ரலி] அவர்கள் காலமாகி, பல ஆண்டுகளுக்கு முன்பே மறைந்து விட்ட போதிலும் கூட அவரது நற்செயலின் பயன் தொடர்ந்து பாய்ந்து, அவரை ஒருபோதும் சந்திக்காத மக்களின் வாழ்க்கையையும் **தொட்டுக்** கொண்டிருக்கின்றது.

**இரண்டாவதாக: பயனுள்ள கல்வியறிவு**

நாம் கல்வியாளர்களாகவோ அல்லது ஆசிரியர்களாகவோ இருந்தால் நிச்சயமாக நாம் கற்றுக் கொடுத்தவை, நாம் **விட்டுச் செல்லும் பரம்பரைச் சொத்தாக** அமையும். ஆனால், நாம் ஆசிரியர்களாக இல்லாவிட்டால் என்ன செய்வது? இந்தச் சிறப்பைப் பெறும் வாய்ப்பை இழந்து விடுவோமா? எனும் கேள்வி இங்கு எழுகிறது.

இதற்கான பதில், அப்படியெல்லாம் இல்லை என்பதாகும். மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கும் மார்க்க சம்பந்தமானக் கல்விக் கூடங்களைப் பாருங்கள்; அவை, பொருள், உழைப்பு அல்லது கருத்துக்கள் எனத் தங்களின் பங்களிப்புகளை வழங்கியவர்களால் கட்டப்பட்டவையாகும். அவர்கள் எப்போதோ தங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று விட்ட போதிலும், அறிவுச் சமூகங்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து பல்கிப் பெருக வேண்டுமென விரும்பிய அம்மக்களின் பங்களிப்புகள் தொடர்ந்து பயன் தந்து வருகின்றன. இந்தப் பங்களிப்புகளின் காரணமாக, மார்க்க அறிவு, திருக்குர்ஆன் மற்றும் நபிவழிப் போதனைகள் ஆகியவற்றை தற்போதைய தலைமுறையினர் கற்றுக் கொள்ள முடிகிறது. பயன் தரும் கல்வியறிவைப்

போலவே இத்தகைய பங்களிப்புகளும் தொடர்ச்சியான நன்மைகளைத் தருபவைகளாக உள்ளன.

**மூன்றாவதாக: தன் பெற்றோருக்காகப் பிரார்த்தனை புரியும் ஒரு நேர்மையானப் பிள்ளை**

சகோதரர்களே! தமது பிள்ளைகள் அல்லாஹ்வையும் அவனது தூதர்[ஸல்] அவர்களையும் நன்றாக அறியும் வகையில் வளர்க்கப்பட வேண்டும்; அதன் மூலம் அவர்கள், அல்லாஹ் மற்றும் அவனது தூதர்[ஸல்] அவர்களின் போதனைகளின் பிரகாரம் **வாழ்ந்து**, அவர்களின் பெற்றோர்கள் மரணித்த பிறகும் அவர்களுக்குத் தொடர்ந்து நன்மையை விரும்பும் பிள்ளைகளாக உருவாக வேண்டுமென்பது ஒவ்வொரு முஸ்லிமான தாய், தகப்பனுக்கும் இயல்பாகவே இருக்கும் ஒரு விருப்பமாகும்.

நம்மில் எவரேனும் தனது தந்தையையோ, தாயையோ இழந்திருந்தால் அவர்களுக்காகப் பிராத்தனை செய்ய நேரம் ஒதுக்குங்கள்; அவர்களுடைய குறைகள் மன்னிக்கப்பட்டு, பாவங்கள் அழிக்கப்படவும், அவர்களின் மண்ணறைகள் எளிதாக விரிவடையவும், அவர்களுடைய ஒவ்வொரு செயலும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளப்படவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

இனியும் நாம் தாமதிக்க வேண்டாம்; நாம் **விட்டுச் செல்லும் பரம்பரைச் சொத்து** அதாவது, நற்காரியங்கள் நாம் மரணித்த பிறகும் நன்மை தருமாறு திட்டமிடுவோமாக! நன்மைகளைத் தொடர்ந்து வழங்கும் விஷயங்களில் முதலீடு செய்வோமாக! நமது **வாழ்நாள் முழுவதும்** நாம் செய்த நன்மைகள் யாவும், நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், மறுமையில் சொர்க்கம் எனும் வெகுமதி நமக்கு வழங்கப்படுவதற்கும் காரணமாக அமையட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمِ.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِين وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا

أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي القُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.